(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 116.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 டிசம்பர் 05, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1309/2025

கௌரவ சந்தன சூரியஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண சபை பாடசாலைகளுக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை இணைப்புச் செய்யப்பட்ட ஆண்டுகள் மற்றும் அவ்வொவ்வொரு ஆண்டிலும் சேவை இணைப்புச் செய்யப்பட்ட எண்ணிக்கை ஆகிய விபரங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அரச ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும்போது மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஏதேனும் சலுகைகளை வழங்க முடியுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சலுகைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு நடத்தப்படவிருந்த போட்டிப் பரீட்சைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் இன்றளவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் / கட்டளைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1322/2025

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாற்றுத்திறனுடைய மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழக வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களின் மாற்றுத்திறன்கள் எவ்வகையானவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாற்றுத்திறனுடைய மாணவர்களின் எண்ணிக்கை மாற்றுத்திறன் வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடைய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி நடைமுறையை இற்றைப்படுத்தவும் முறைப்படுத்தவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அரச பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடைய மாணவர்களை இணைத்துக் கொள்வதில் இட ஒதுக்கீட்டு முறைமையொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கான உள்ளடக்கக் கல்வி முறையியல் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது செயற்படுத்தப்படும் முறை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மாற்றுத்திறனுடைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு தாங்கள் விரும்பும் எந்தவொரு பாடப்பிரிவிலும் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்கள் தற்போது கல்வி கற்கும் பாடப்பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மாற்றுத்திறனுடைய மாணவர்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் கல்வி கற்க முன்வராமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

1349/2025

கௌரவ உபுல் கித்சிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை நெல் கொள்வனவிற்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2025 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட நெல்லின் அளவு மற்றும் அச்சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான விபரங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) நெல்லை கொள்வனவு செய்வதற்காக தனியார் வர்த்தகர்களுக்கு அரசாங்கத்தினால் நிதி மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்படும் நெல்லை சந்தைக்கு விநியோகிப்பதற்கு உரிய பொறிமுறையொன்று தயாரிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(v) எதிர்வரும் போகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக தனியார்துறையுடன் இணைந்து கூட்டுப் பொறிமுறையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1506/2025

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிருவாக சேவையில் உள்ள அநேகமான அலுவலர்கள் பத்து வருடங்களுக்கும் மேலாக இடமாற்றமின்றி இருப்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அத்தகைய அலுவலர்களுக்காக இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) இடமாற்றம் உரியவாறு அளிக்கப்படாததால், மாவட்ட மற்றும் பிரதேச மட்ட நிருவாகப் பணிகளில் வினைத்திறனின்மை, பக்கச்சார்பு போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதை அறிவாரா;

(iv) ஆமெனில், அதனைத் தீர்ப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விதந்துரைக்கப்பட்ட இடமாற்றத்திற்கான காலத்தை விஞ்சியுள்ள அலுவலர்களைக் கண்டறிய வெளிப்படைத் தன்மையானதும் நிரந்தரமானதுமான ஒரு வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், இடமாற்ற செயன்முறையின் நியாயமான தன்மையையும் பொறுப்புணர்வையும் உறுதிப்படுத்துவதற்கான வழிமுறை உருவாக்கப்படுமா என்பதையும்;

(iii) சுழற்சி முறையிலான நியமனங்கள் போன்ற சீர்த்திருத்தங்களை கையாள்வதற்குள்ள வாய்ப்புகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை நிருவாக சேவை அலுவலர்களுக்கான இடமாற்றக் கொள்கை நவீன நிருவாக தரநியமங்களுக்கு அமைவாக திருத்தப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், குறித்த இடமாற்றங்களை ஒழுங்குறுத்த எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

1554/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள —

(i) பிரதேச செயலங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ள சனத்தொகை மற்றும் இன விகிதாசாரம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் உரித்தான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும், அவை யாவை என்பதையும்;

(ii) மேற்படி தொகுதிகளில் காணப்படும் சனத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மூதூர் மற்றும் திருகோணமலை தேர்தல் தொகுதிகளில் தலா இரண்டு பிரதேச செயலகங்களும் சேருவில தேர்தல் தொகுதியில் ஆறு பிரதேச செயலகங்களும் அமைந்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கான பிரதேச செயலகங்களை நிறுவும் போது அநீதி இழைக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) எதிர்காலத்தில், புதிய பிரதேச செயலகங்களை நிறுவும் போது திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை, கிண்ணியா பிரதேச சபை மற்றும் தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவுக்குரித்தான பிரதேசங்களுக்கு தனித்தனி பிரதேச செயலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தம்),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம்,— உயர்தொழிலர் நியமனங்களைப் பேணுவதற்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களின் ஒழுக்காற்றுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கும்; நிலையான சொத்து உயர்தொழில் தொடர்பிலான பொதுமக்களின் அக்கறையை பாதுகாத்து ஊக்குவிப்பதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 25 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளிலிருந்தும் 2025 நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 5, 6, 9, 10, 11, 17, 20 மற்றும் 25 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2026 ஜனவரி 06 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

6.

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"இலங்கை விவசாய நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபதாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, டிசம்பர் 03).

*2.

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் ஏற்பாடுகள், 2025 நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்து இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025 நவெம்பர் 28 ஆம் திகதிய 2464/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ், செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 26 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 22 இன் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்பிறல் 01 ஆம் திகதிய 2430/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 நவெம்பர் 07 ஆம் திகதிய 2461/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 நவெம்பர் 07 ஆம் திகதிய 2461/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி மீளளிப்பு நிதியத்தை முகாமைத்துவம் செய்வது தொடர்பில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 31 ஆம் திகதிய 2460/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் 2025 ஒக்தோபர் 04 ஆம் திகதி விதிக்கப்பட்டதும், 2025.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 15 ஆம் திகதிய 2458/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 2459/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 2457/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 1),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பில் 2025.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2025 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 2457/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 2),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பில் 2025.11.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2025 நவெம்பர் 07 ஆம் திகதிய 2461/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 243 - நிகழ்ச்சித்திட்டம் 01 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்கி 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தினால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையில் இருந்து முப்பத்தோராயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபாயினை (ரூபா. 31,500,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு** | **243** - | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **01** - | தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | |
| | | மீண்டெழும் செலவினம் | ரூ. 31,500,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 31,500,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 நவம்பர் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 முதல் 3 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 51,394,600,000 ஆகும்.

*19.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 249 - நிகழ்ச்சித்திட்டம் 01 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்கி 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து பதினெட்டாயிரத்து ஐநூறு மில்லியன் ரூபாயினை (ரூபா 18,500,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு** | **249** - | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **01** - | தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் | |
| | | மூலதனச் செலவினம் | ரூ. 18,500,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 18,500,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 நவம்பர் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 முதல் 4 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 82,894,600,000 ஆகும்.

*20.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்கி 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ஐம்பதாயிரம் மில்லியன் ரூபாயினை (ரூபா 50,000,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

**தலைப்பு** **240** - வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

**நிகழ்ச்சித்திட்டம்** **02** - அபிவிருத்திச் செயற்பாடுகள்

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினம் | ரூ. 20,000,000,000 |
| மூலதனச் செலவினம் | ரூ. 30,000,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ. 50,000,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 டிசம்பர் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 முதல் 5 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 101,394,600,000 ஆகும்.

*21.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம், 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142(2) ஆம் பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 04 ஆம் திகதிய 2452/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.11.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கை (2023),— 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகச் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் VI ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவின் கீழ் 2025.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2023.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.07.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.08.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொது விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொது விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், — களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்டின் வருடாந்த அறிக்கை (2022/2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.03.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்டின் 2022/2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*28.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

29.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---